Item No 4

# நடந்த விஷயங்களுக்கு பொறுப்புகூற வேண்டும் என்ற நிஜமான எண்ணம் இல்லை: படிப்பிணைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கென இலங்கையில் முன்னெடுக்கும் தேசிய செயற்திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள்

இலங்கையில் நடந்த மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அந்நாடு தவறிவருவதால், குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவரும் நிலை நீடிக்கிறது. அந்நாட்டில் எதேச்சதிகார தடுப்புக்காவலும், சித்ரவதையும், தடுப்புக் காவலில் ஆட்கள் கொல்லப்படுவதென்பதும் கட்டுப்பாடின்றி நீடித்துக்கொண்டேதான் போகின்றன. விடுதலைப் புலிகளுடனான ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து மூன்று வருடங்கள் தாண்டிவிட்டபோதிலும் இப்படியான உரிமை மீறல்கள் தொடர்ந்து நடப்பதாகவே செய்திகள் வந்துகொண்டிருகின்றன.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருந்ததாக சந்தேகிக்கப்படுபவர்கள் நூற்றுக்கணக்கானோரை முறையான குற்றச்சாட்டோ வழக்கு விசாரணையோ இன்றித் தடுத்துவைக்க அதிகாரிகள் இன்றளவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் (PTA) பயன்படுத்திவருகின்றனர். நிர்வாக வசதிக்காக ஆட்களை நெடுங்காலம்வரை தடுத்துவைப்பதை

PTA அனுமதிக்கிறது. தாங்கள் சித்ரவதைக்கு உள்ளானதாகவோ பிற வகையில் மோசமாக நடத்தப்பட்டதாகவோ கைதிகள் குற்றம்சாட்டும் பட்சத்தில் அவற்றை நிரூபிக்க வேண்டிய பொறுப்பை அக்கைதிகளின் மீதே இச்சட்டம் ஏற்றிவைத்துவிடுகிறது. கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தையும், ஆட்கள் ஒன்றுகூடும் சுதந்திரத்தையும் ஒடுக்குவதாகவும், மாற்றுக் கருத்தை நசுக்குவதாகவும் இது அமைந்துள்ளது. இப்படியான பிரச்சினைகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஏற்கனவே விவரமாக ஆவணப்படுத்தியுள்ளது.[i]

ஐநா மனித உரிமைகள் மன்றம் (HRC) 22 மார்ச் 2012 அன்று நிறைவேற்றிய 19/2 எண் கொண்ட தீர்மானம் என்பது போர்க் குற்றங்கள் உள்ளிட்ட மோசமான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புகூறும் நடவடிக்கைகளை இலங்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவதில் ஒரு முக்கியமான முன்னேற்றமாகும். இலங்கை அரசு அமைத்த படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் (LLRC) பரிந்துரைகளை செயல்படுத்த "முழுமையான செயற் திட்டம்" ஒன்றை இலங்கை உருவாக்க வேண்டும் என்றும் "சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டதாக குற்றம்சாட்டப்படும் விஷயங்களுக்கு பதில் தெரிவிக்க வேண்டும்"[ii] என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது. LLRC தனது நிறைவறிக்கையில் "சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டது தொடர்பான மோசமான குற்றச்சாட்டுகள் பற்றி போதுமான அளவில் கவனத்தில் எடுக்கவில்லை" என இத்தீர்மானத்தில் கவலை தெரிவிக்கப்பட்டிருந்தது.[iii]

இத்தீர்மானத்தின் பின்னர் 2012 ஜூலையில் LLRC பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான தேசிய செயற்திட்டம் (இனி செயற்திட்டம் என்று குறிப்பிடப்படும்) ஒன்றை அறிவித்திருந்தது. LLRC தந்த 285

பரிந்துரைகளில் 92 பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது பற்றி செயற்திட்டம் பேசியிருந்தது. எவ்விதமான நடவடிக்கைகள் தேவை, அதை நிறைவேற்ற வேண்டிய அமைப்புகள் எவை, திட்டங்கள் எந்த அளவில் நிறைவேறுகின்றன என்பதைக் காட்டும் குறியீடுகள் எவை, திட்டங்களுக்கான கால வரையறை போன்ற விடயங்கள் இந்த செயற்திட்டத்தில் மேலோட்டமாக குறிப்பிடப்பட்டிருந்தன.[iv] ஆனால் நாட்டில் நடந்த மோசமான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புகூற வேண்டிய அவசியம் பற்றி செயற்திட்டம் போதிய அளவில் பேசவில்லை. மேலும் நல்லிணக்கத்துக்கு மிகவும் அவசியமான சீர்திருத்தங்களை செயற்திட்டம் ஒத்திப்போட்டிருந்தது. அரசியல் சாசன சீர்திருத்தம் தொடர்பில் எதிர்காலத்தில் அமைக்கப்படக்கூடிய ஒரு நாடாளுமன்ற தெரிவுக் குழு அவற்றை விவாதிக்க வேண்டும் என செயற்திட்டம் பரிந்துரைத்திருந்தது.

குற்றங்களுக்கு பொறுப்புகூறுதல் தொடர்பான விஷயங்கள் செயற்திட்டத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கவில்லை. தவிர சுயாதீனமான விசாரணைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் LLRC தந்த அதிகம் தெளிவான பரிந்துரைகளுடன் பொறுப்புகூறல் நடவடிக்கைகள் முழுமையாக பொருந்திப்போவதாகவும் இல்லை. ஏற்கனவே இருக்கும் சில வழிமுறைகள் மூலமாகத்தான் இவ்விஷயங்களைக் கையாள வேண்டும் என்பதாய் செயற்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழிமுறைகள் பலன் தரக்கூடியவை அல்ல என்பதை சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஏற்கனவே ஆவணப்படுத்தியுள்ளது.[v] எந்தெந்த அமைப்புகள் உரிமை மீறல்களைச் செய்ததாக குற்றம்சாட்டப்படுகிறதோ அதே அமைப்புகளிடம் போய் அக்குற்றச்சாட்டை விசாரிக்கச் சொல்வதாகவும், நடவடிக்கை எடுக்கச் சொல்வதாகவும் இந்த செயற்திட்டம் அமைந்துள்ளது என்பதுதான்

இதன் மிகப் பெரிய பலவீனம். போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக சிப்பாய்கள், கட்டளை அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்படும் நிலையில், பொதுமக்கள் முறைதவறி கொல்லப்பட்டது, "ஆட்கடத்தல், பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டவர்கள் காணாமல்போதல், எதேச்சதிகார தடுப்புக்காவல்" போன்றவற்றை விசாரிக்கும் பொறுப்பை பாதுகாப்பு அமைச்சகத்திடமே வழங்குவதாக செயற்திட்டம் அமைந்துள்ளது.[vi] புதிதாகவும் சுயாதீனமாகவும் விசாரணைகள் நடத்தப்படும் என்ற உத்தரவாதத்தை செயற்திட்டம் வழங்கவில்லை. மாறாக இலங்கையின் ஆயுதப் படைகள் சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ், அந்தந்த அமைப்புக்கு உள்ளேயே நடக்கும் "ஒழுங்கு நடவடிக்கை" மூலமாக இவை விசாரிக்கப்படும் என்றுதான் செயற்திட்டம் கூறுகிறது. பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு ஆட்கள் காணாமல்போனதாக குற்றம்சாட்டப்படும் சம்பவங்களை விசாரிப்பதற்கென விசேட ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்ற LLRC பரிந்துரையை செயற்திட்டம் நிராகரித்துள்ளது.[vii]

"பிரிட்டனின் சானல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோ படங்கள் எழுப்புகின்ற குற்றச்சாட்டுகள் உண்மையானவையா என்பதைக் கண்டறிய சுயாதீன விசாரணை வேண்டும் என்று LLRC குறிப்பிட்டுச் சொல்லியிருந்தது.[viii] (சட்டத்துக்கு அப்பாற்பட்டு தண்டனை வழங்கும் விதமாக ஆட்களைக் கொன்றது, பிடிபட்ட விடுதலைப் புலி உறுப்பினர்கள் எதிராக பாலியல் வன்செயல்களைச் செய்தது போன்ற காரியங்களில் இலங்கை அரச படைகள் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் ஈடுபட்டிருக்கலாம் என்பது போன்ற குற்றச்சாட்டுகள் இவை). இந்தக் குற்றச்சாட்டுகள் எந்த அளவுக்கு உண்மை என்பது தொடர்பில் இராணுவத்தினர் செய்துவருகின்ற விசாரணைகளை பாதுகாப்பு அமைச்சகம் மதிப்பீடு செய்ய வேண்டும் என்று மட்டுமே

செயற்திட்டம் கூறுகிறது. "பாதுகாப்பு அமைச்சகம் செய்யும் அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் அது பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்" என்று செயற்திட்டம் சொல்கிறது.[ix] சட்டவிரோத ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை ஒழிக்கின்ற வேலையை இதே அமைச்சகம் செய்ய வேண்டும் என்றும் செயற்திட்டம் கேட்டுக்கொள்கிறது. ஆனால் இந்த ஆயுதக் குழுக்கள் பல பாதுகாப்பு படைகளுடன் சேர்ந்துதான் செயல்பட்டன என்பதே குற்றச்சாட்டு[x]. தவிர ஊடகவியலாளர்கள் மீது பொலிசார் தாக்குதல்களை நடத்தினார்கள் என்று குற்றம்சாட்டப்படும் நிலையில் ஊடகப் பணியாளர்கள் மீதான தாக்குதல்களை விசாரிக்கும் பொறுப்பு பொலிசாரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

"பொருத்தமான இடங்களில்" குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று செயற்திட்டம் கூறுகிறது என்றாலும், சுயாதீன விசாரணைகளுக்கு போதிய இடமில்லாத காரணத்தினால் கட்டளையிடும் இடத்திலிருந்த உயர்மட்ட ஆட்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

"இலங்கை அரசாங்கம் மேற்சொன்ன நடவடிக்கை எடுப்பதில் அதற்கு ஆலோசனையும், தொழில்நுட்ப உதவிகளையும் வழங்க ஐநாவின் மனித உரிமை உயர் ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) முன்வர வேண்டும். இலங்கையின் சம்மதத்துடனும், ஆலோசனையுடனும் இந்த உதவிகள் வழங்கப்பட வேண்டும். அவ்விதமாக வழங்கும் உதவிகள் பற்றி ஐநா மனித உரிமை மன்றத்தின் 22ஆவது கூட்டத்தொடரில் அறிக்கை ஒன்றை உயர் ஸ்தானிகர் அலுவலகம் சமர்ப்பிக்க வேண்டும்." என்று தீர்மானம் எண் 19/2ல் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.[xi]

OHCHR நிபுணர்கள் செப்டம்பரில் இலங்கை வந்து தீர்மான எண் 19/2ஐ நிறைவேற்றுவது தொடர்பில் அரசாங்கத்துக்கு "ஆலோசனையும் தொழில்நுட்ப உதவிகளும் வழங்கலாம்" என்று ஆகஸ்டில் இலங்கை அரசு கோடிகாட்டியிருந்தது. தீர்மானத்தை நிறைவேற்றும் பொறுப்பிலுள்ள அமைப்புகள் எந்த அளவுக்கு சுயாதீனமானவை என்பதில் இந்த நிபுணர்கள் குறிப்பிட்ட கவனம் செலுத்த வேண்டும் என சர்வதேச பொதுமன்னிப்பு சபை கேட்டுக்கொள்கிறது. "நம்பத்தகுந்த மற்றும் சுயாதீனமான" நடவடிக்கை தேவை என தீர்மானம் வலியுறுத்துகிறது.[xii] அப்படிப் பார்க்கப்போனால், பாதுகாப்பு அமைச்சகமோ, ஆயுதப் படைகளோ, பொலிசாரோ இந்த உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கக் கூடாது. காரணம் உரிமை மீறல்கள் இந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்களாலேயே செய்யப்பட்டது என்பதும், அரசாங்க அமைச்சர்கள் மற்றும் கட்டளையிடும் இடத்திலுள்ள மூத்த அதிகாரிகளின் உத்தரவுக்கமைய இவர்கள் இதனை செய்திருக்கலாம் என்பதும்தான் குற்றச்சாட்டே.

யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் தமது ஆயுதப் படைகளும் விடுதலிப் புலிகளும் செய்ததாகத் தெரிவிக்கப்படும் சர்வதேச சட்டங்களின் கீழான குற்றங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கும், குற்றம்சாட்டப்படும் பிற மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்குமான புதியதோர் உறுதிப்பாட்டை அரசாங்கம் தற்போது கொண்டுள்ளது என்று காட்டுவதாக இலங்கையின் செயற்திட்டம் அமைந்திருக்கவில்லை. நடந்த சம்பவங்களுக்கு இலங்கை பொறுப்புகூறுவது தொடர்பில் ஐநா மனித உரிமைகள் மன்றம் நிறைவேற்றிய தீர்மானம் 19/2க்கு இலங்கை தந்திருக்கக்கூடிய பதில் ஏற்புடையதாக இல்லை. நடவடிக்கை எடுப்பதாய் காட்டிக்கொள்ள வேண்டும், ஆனால் அதனால் ஏற்படும் விளைவு என்று ஒன்றும்

இருக்காது என்பதாகத்தான் பதில் அமைந்துள்ளது.

இலங்கை அரசு கொடுக்கின்ற வாக்குறுதிகளையும் முன்வைக்கின்ற திட்டங்களையும் கேட்டு ஐநா உறுப்பு நாடுகள் திருப்தி அடைந்துவிடக்கூடாது. விரும்பிய விதமான மாற்றங்கள் இலங்கையில் ஏற்படுகின்றன என்பதற்கான திடமான ஆதாரங்களைக் கேட்டு அவர்கள் அரசை வலியுறுத்த வேண்டும். சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றமாகக்கூடிய செயல்கள் நடந்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் நடக்கும் அனைத்து விசாரணைகளுமே பக்கச்சார்பற்றதாக இருக்க வேண்டும் என்பதை ஐநா மீண்டும் வலியுறுத்த வேண்டும். சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்காத பட்சத்தில் இலங்கை அரசு இக்குற்றங்களை சிரத்தை எடுத்து விசாரிப்பதற்கோ, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கோ கொஞ்சமும் வாய்ப்பு இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காமல் போனால், விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும், எதிர்கால சந்ததியினரைப் பாதிக்கும், இலங்கையிலும் மற்ற இடங்களிலும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு மிகவும் அவசியமான அமைப்புகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் என்பதையெல்லாம் ஐநா மனித உரிமைகள் மன்றத்திடம் சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் நோக்கில், ஐநா மனித உரிமைகள் மன்றமும், ஐநா உறுப்பு நாடுகளும் இலங்கையிடம் பின்வருவனவற்றை வலியுறுத்த வேண்டும்:

*படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு*

- மனித உரிமைகளும் மனிதாபிமானச் சட்டங்களும் மீறப்பட்டதாக LLRC மூலமாகவோ பிற வகையிலோ அடையாளம் காணப்படும் சம்பவங்களை முறையாகவும் பலனளிக்கும் விதமாகவும், சுயாதீனமாகவும் விசாரிக்க வேண்டும். இப்படியான குற்றங்களை இழைத்தவர்களுக்கு பொது மன்னிப்பு கொடுக்கவும் கூடாது, அது பற்றி பரிசீலிக்கவும் கூடாது. அவர்கள் எவ்விதமான அந்தஸ்துடையவர்களாக இருந்தாலும் சரி, அல்லது அரசாங்கத்தில் எந்த அளவுக்கு உயர்ந்த பதவியில் இருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தம் உறுப்பினர்கள் செய்ததாக குற்றம்சாட்டப்படும் விஷயங்களை சம்பந்தப்பட்ட அமைப்புகளே விசாரிக்கும் நிலை இருக்கக்கூடாது.

*பயங்கரவாத தடுப்புச் சட்டங்கள்*

- பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும், நிர்வாக வசதிக்காக ஆட்களை தடுத்துவைக்கும் வழக்கத்தையும் ஒழிக்க வேண்டும்;
- "புனர்வாழ்வு முகாம்கள்" என்று சொல்லப்படும் இடங்களில் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் உட்பட அவசரகால சட்டங்கள் அல்லது பயங்கரவாத தடுப்புச் சட்டங்களின் கீழ் கைதானவர்களில், முறையாக குற்றம்சாட்டப்பட்டு, விசேடமாக அல்லாமல் பொதுவாக குற்றங்களை விசாரிப்பதற்கென்று வழமையான முறையில் அமைக்கப்பட்ட சுயாதீனமான நீதிமன்றங்களின் உத்தரவுக்கமைய தடுத்துவைக்கப்பட்டவர்கள் தவிர

மற்றவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். இப்படித் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் மீதான வழக்குகள் தாமதமின்றி நடத்தப்பட வேண்டும், பொதுமக்களை விசாரிப்பதற்கென்று வழமையான முறையில் அமைக்கப்பெற்ற நீதிமன்றத்தினால் இவர்கள் விசாரிக்கப்பட வேண்டும். சர்வதேச அளவில் குற்ற சந்தேக நபருக்கு வழங்கப்படுகின்ற உரிமைகளும் உத்திரவாதங்களும் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இவர்களுக்கு மரண தண்டனை வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும். (ஆட்கொணர்வு மனுக்களிலும் அடிப்படை உரிமை வழக்குகளிலும் உயர்நீதிமன்றம் தந்த உத்தரவுகள் உட்பட) கைதிகளை விடுதலை செய்யச் சொல்லி வந்த அனைத்து நீதிமன்ற உத்தரவுகளும் செயல்படுத்தப்பட வேண்டும்.

*பலவந்தமாகவும், சுயவிருப்பத்துக்கு மாறாகவும் கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போன ஆட்கள் பற்றிய செயலணி*

- ஐநா மனித உரிமைகள் மன்றம் 19/2 எண் கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றிய நிலையில், பலவந்தமாகவும், சுயவிருப்பத்துக்கு மாறாகவும் கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போன ஆட்கள் பற்றிய செயலணி இலங்கை வருவதற்கு முன்வைத்த கோரிக்கை தாமதமின்றி ஏற்கப்பட வேண்டும். அச்செயலணி இலங்கையில் ஆய்வுகளை செய்ய தேவையான அனுசரணைகள் வழங்கப்பட வேண்டும்.

குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருந்துவரும் நிலையை முடிவுக்கு கொண்டுவர இலங்கை அரசங்கம் தொடர்ந்து

தவறுமானால், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அரசாங்கத்தாலும் விடுதலைப் புலிகளாலும் இழைக்கப்பட்டதாக குற்றம்சாட்டப்படும் சர்வதேச சட்டத்தின் கீழான குற்றச்செயல்களை சுயாதீனமாகவும் சர்வதேச அளவிலும் விசாரிக்க ஐநா மன்றம் தயாராக வேண்டும்.

---

[i] காண்க: தடுப்புக்காவலில் பூட்டப்பட்டவர்கள்: இலங்கையின் பாதுகாப்புக் கைதிகள், ASA 37/003/2012 முகவரி: http://www.amnesty.org/en/library/info/ASA37/003/2012/en

[ii] இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புகூறல் சூழலையும் மேம்படுத்துவது, A/HRC/RES/19/2, OP2.

[iii] மேற்சொன்ன அதே ஆவணத்தின் அறிமுக லட்சிய விளக்கதைக் காண்க.

[iv] LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயற் திட்டம், 26 ஜூலை 2012, இலங்கை அரசின் உத்தியோகபூர்வ இணையதளம், http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca201207/20120726national_plan_action.htm, accessed 7 August 2012.

[v] உதாரணத்துக்கு LLRC ஆவணத்தின் இறுதி அறிக்கையில் பத்தி எண் 9.63, (படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் அறிக்கை, நவம்பர் 2011), " கைதிகளின் பெயர்கள், தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம், இடமாற்றம் செய்யப்பட்டதற்கான பதிவுகள் போன்ற தரவுகள் பட்டியல் உருவாக்கப்பட வேண்டும். நாடெங்கிலும் உள்ள கைதிகள் பற்றிய தரவுகளை குடும்பத்தார் ஒரே இடத்தில் முழுமையாக பெறலாம் என்கிற நிலை வர வேண்டும்." இதுதவிர தடுத்துவைக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றை அதிகாரிகள் பொதுவாக பிரசுரிக்க வேண்டும் என்றும் அவ்வறிக்கை கோரியிருந்தது. ஆனால் இந்தப் பரிந்துரையை செயல்படுத்துவதற்கான தேசிய செயற் திட்டமோ, ஏற்கனவே இருக்கின்ற தரவுகளை மேம்படுத்த வேண்டும் என்று மட்டும்தான் கூறுகிறது. (இப்போது இருப்பவற்றிலே பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்கள் மட்டும்தான் இருக்கின்றன.) மேலும் "ஒருவர் எங்கு தடுத்துவைக்கப்படுகிறார் என்பதை உறவுக்காரர்களுக்கு தெரியப்படுத்துகின்ற தற்போதைய நடைமுறையை பொலிசார் தொடர வேண்டும்" என்று செயற் திட்டம் கோருகிறது. இந்த இரண்டு நடைமுறைகளிலும் உள்ள பிரச்சினைகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஏற்கனவே ஆவணப்படுத்தியுள்ளது; காண்க:

தடுப்புக்காவலில் பூட்டப்பட்டவர்கள்: இலங்கையின் பாதுகாப்புக் கைதிகள், ASA 37/003/2012 முகவரி: http://www.amnesty.org/en/library/info/ASA37/003/2012/en

[vi] LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயற் திட்டம், 26 ஜூலை 2012, இலங்கை அரசின் உத்தியோகபூர்வ இணையதளம், http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca201207/20120726national_plan_action.htm, accessed 7 August 2012.

[vii] LLRC இறுதி அறிக்கையில் பத்தி எண் 9.51, 9.9 மற்றும் 9.37 ஆகியவை பின்வருமாறு கோருகின்றன. “பொதுமக்கள் கொல்லப்பட்ட்து காயமடைந்த்து போன்ற சம்பவங்கள் குறிப்பாக எந்த நேரத்தில் நடந்துள்ளன என்பதைக் கண்டறிந்து, உண்மைகளை இலங்கை அரசு முழுமையாக ஊர்ஜிதப்படுத்த வேண்டும். அப்படி விசாரிக்கும்போது யார் தவறுதலாக நடந்திருந்தார்கள் என்று தெரியவரும்போது அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முறையாகத் தண்டிக்கப்பட வேண்டும்”. ஆனால் புதிதாக சுயாதீனமாக விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படும் என்ற விவரமே தேசிய செயற் திட்டத்தில் இல்லை. “ஏற்கனவே நடந்துவருகின்ற ஒழுங்கு நடவடிக்கைகள்” நிறைவுபெற வேண்டும் என்று மட்டும்தான் இந்த செயற் திட்டம் கூறுகிறது.

[viii] LLRC பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயற் திட்டம், 26 ஜூலை 2012, இலங்கை அரசின் உத்தியோகபூர்வ இணையதளம், http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca201207/20120726national_plan_action.htm, accessed 7 August 2012.

[ix] மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்திலேயே உள்ளது.

[x] LLRCயின் இறுதி அறிக்கை பத்தி எண் 9.73, “சட்டவிரோத ஆயுதக் குழுக்கள் மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஒழுங்கான விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றமிழைத்தவர்கள் மீது உரிய குற்றவியல் சட்ட நடவடிக்கைக்கள் கொண்டுவரப்பட வேண்டும்.” என்று கூறுகிறது. ஆனால் தேசிய செயற் திட்டமோ “யுத்த காலத்தில் சட்டவிரோத ஆயுதக் குழுக்கள் இந்த செயலாற்றியிருந்தன. இவ்வகையான குழுக்களின் செயற்பாடுகளை முழுமையாக ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்படியான குழுக்கள் மீண்டும் தலைதூக்காத வண்ணம் தொடர்ந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.” என்று மட்டும்தான் கூறுகிறது.

[xi] OP3.

[xii] OP1.